**<u>சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்.</u>**

**நாள் : 24.04.2026**

**வழக்கு எண் : HMOP.79/2023**

**சாட்சி பெயர் : திரு.செல்வகுமார் / PW.1**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

எதிர்மனுதாரர் திருமண சமயத்தில் எம்.எஸ்.சி பி.எட் படித்துவிட்டு புதியம்புத்தூரில் உள்ள தனியார் பள்ளிகூடத்தில் வேலை பார்த்தார் என்றால் சரிதான். எனக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணம் குறித்து இடைதரகராக இருந்து பேச்சுவார்த்தை நடத்தியவர் தூத்துக்குடி அம்பேத்கர் நகரை சேர்ந்த பெருமாள் என்றால் சரிதான். அதன்பின்னர் எதிர்மனுதாரர் தரப்பினர் என் வீட்டிற்கு வந்து எங்களை பார்த்து சென்றார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு இந்த சம்மந்தம் வேண்டாம் என சொல்லி எதிர்மனுதாரர் வீட்டார் நிராகரித்துவிட்டார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு எனது பெற்றோர்கள் தனிக்குடித்தனம் வைத்து கொள்வதாக மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள் என்றால் சரியல்ல. எவ்வளவு நாட்கள் கழித்து திருமணம் குறித்து பேச்சுவார்த்தை நடந்தது என்றால் சரியாக தெரியவில்லை. திருமணமானது எதிர்மனுதாரர் தரப்பில் நிராகரிக்கப்பட்டு, மீண்டும் எங்கள் தரப்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு அதன்பிறகு திருமணம் நடந்தது என்றால் சரியல்ல. எங்கள் வீட்டில் அப்பா, அம்மா, தம்பி மற்றும் நான் வசித்துவருகிறோம். எங்கள் வீடு சொந்தவீடு. எங்கள் சொந்தவீட்டில் நான், என் தம்பி, தங்கை அப்பா, அம்மாவுடன் சேர்ந்து எதிர்மனுதாரர் எங்கள் திருமணத்திற்கு கூட்டுகுடும்பமாக வாழ்ந்துவந்தார் என்றால் சரிதான். திருமணத்தின்பயனாய் எங்களுக்கு குழந்தை இல்லை. திருமணத்திற்கு பின்பு எதிர்மனுதாரர் வேலைக்கு சென்றார் சரியல்ல, கொரானா காலம் என்பதால் வீட்டில் இருந்து வகுப்பு எடுத்தார். 2021ம் வருடம் நான் திருநெல்வேலி அரசு சட்டக்கல்லூரியில் எல்.எல்.பி முதலாம் ஆண்டு படித்து வந்தேன். எங்கள் திருமணம் முடிந்து இரண்டு நாட்களில் தீபாவளி வந்ததால் எங்கள் குடும்பத்தை பொங்கல் வரும்படி எதிர்மனுதாரர் வீட்டார் சொன்னார்கள் என்றால் எனக்கு தெரியாது, எனது அப்பாவிடம்தான் பேசினார்கள். என்னையும் என் குடும்பத்தாரையும் தலை தீபாவளிக்கு அழைக்கவில்லை என்பதால் மனக்கசப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு வீட்டு வேலை, சமையல் வேலை எதிர்மனுதாரர் உதவி செய்வார் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு குழந்தை பாக்கியத்திற்காக

எதிர்மனுதாரரை மருத்துவமனையில் காண்பித்து நாங்கள் வாங்கி கொடுத்த மருந்து மாத்திரைகளை அவர் எடுத்து கொண்டார் என்றால் சரிதான். குழந்தைபாக்கியத்திற்கான மருந்து மாத்திரை தவிர வேறு ஏதேனும் மருந்து மாத்திரை எடுத்துக்கொண்டதில்லை என்றால் சரியல்ல, படபடப்பு, தலைவலி மற்றும் சுவாச பிரச்சனைக்காக அவர் மருந்து உட்கொண்டார். இந்த மனுவில் நான் தாக்கல் செய்துள்ள சிகிச்சை சம்மந்தப்பட்ட ஆவணங்கள் எதிர்மனுதாரருக்கு குழந்தைபாக்கியத்திற்காக வழங்கப்பட்டவை என்றால் சரிதான். படபடப்பு, தலைவலி மற்றும் சுவாச பிரச்சனை தொடர்பாக சிகிச்சை பெற்றதாகவோ, மருந்து சாப்பிட்டதாகவே நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு எனக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே என்ன பிரச்சனை என்றால் அவருக்கு உடல்ரீதியாக மாதவிடாய் பிரச்சனை இருந்தது, மேலும் படபடப்பு, தலைவலி மற்றும் சுவாச பிரச்சனை இருந்ததாக திருமணத்திற்கு முன்பு சொல்லவில்லை, நான் என்ன முடிவு எடுத்தாலும் அதை அவர் ஏற்றுக்கொள்ளாமல் மறுத்துவிடுவார், என் பெற்றோருக்கும், அவரது பெற்றோருக்கும் இடையே நல்ல உறவு முறை இல்லை. மேற்படி நான்கு பிரச்சனைகள் தொடர்பாக எங்களுக்கு இடையே எந்தெந்த தேதியில் என்ன பிரச்சனை ஏற்பட்டது என மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். ஜனவரி, 2021ம் வருடம் நானும், எதிர்மனுதாரரும் தஞ்சாவூரில் உள்ள என் தாய்மாமா வீட்டிற்கு திருமண விருந்துக்கு சென்றோம். திருமணம் முடிந்த எத்தனை நாட்களில் எங்களுக்கு பிரச்சனை ஏற்பட்டது என்றால் திருமணம் முடிந்த 2வது நாளே பிரச்சனை ஏற்பட்டது. நான் எல்.எல்.பி படிப்பை 2024ம் ஆண்டு முடித்தேன். எனக்கும், எதிர்மனுதாருக்கும் திருமணம் முடிந்த பின்னர் எதிர்மனுதாரரின் வருமானத்தை வைத்துதான் குடும்பம் நடத்தினோம் என்றால் சரியல்ல, நானும், லிட்டில்பிளவர் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக பணி செய்தேன். எனது முதல்விசாரணை சாட்சிய வாக்குமூலத்தில் மேற்படி விபரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். திருமணத்திற்கு முன்பும், பின்பும் நான் எந்தவித வேலை இல்லாமல் இருந்தேன் என்றால் சரியல்ல. எனக்கு வேலை இல்லை என்பதால் எதிர்மனுதாரர் வேலைக்குசென்று, சம்பாதித்து அந்த வருமானத்தை வைத்து எங்கள் குடும்பம் வாழ்ந்து வந்தோம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் திருமண சமயத்தில் அணிந்து வந்த நகைகளை அடகுவைத்து நான்

கடை வைத்தேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு நானோ, எனது தகப்பனாரோ எங்கள் ஊரில் வீடு கட்டினோமா என்றால் எனது தகப்பனார் கட்டினார். அந்த கட்டுமானத்திற்கு எனது மனைவியின் நகைகளை அடகுவைத்து செலவு செய்தோம் என்றால் சரியல்ல. நானும், எதிர்மனுதாரரும் எந்த வருடம் திருநெல்வேலிக்கு தனிக்குடித்தனம் சென்றோம் என்றால் 2022ம் வருடமாகும். 2022ம் வருடம் எனது தாயார் எதிர்மனுதாரரிடம் அதிக வேலைவாங்கி வன்கொடுமை செய்து எதிர்மனுதாரரின் நகைகளை அடமானம் வைத்து செலவு செய்ததால் திருநெல்வேலிக்கு தனிக்குடித்தனம் சென்றோம் என்றால் சரியல்ல. திருநெல்வேலிக்கு சென்றபிறகு எனது மனைவி வேலைக்கு செல்லவில்லை, நான் மட்டும் லிட்டில்பிளவர் பள்ளியில் அதே வேலை பார்த்தேன். திருநெல்வேலியில் எனது அம்மாவின் அம்மா வீடு உள்ளது. நான் திருநெல்வேலியில் எனது மனைவியுடன் இருக்காமல் ஒருமாதம்வரை எனது பாட்டி வீட்டில் இருந்து வருவேன் என்றால் சரியல்ல. திருநெல்வேலி சுமார் 7மாதங்கள் தனிக்குடித்தனம் இருந்தோம். அந்த 7 மாதங்களும் எதிர்மனுதாரர் எனக்கு செய்யவேண்டிய பணிவிடைகளை செய்தார் என்றால் சரியல்ல. திருநெல்வேலியில் இருந்தபோதும் எனக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கருத்துவேறுபாடு இருந்துவந்தது. திருநெல்வேலியில் தனிக்குடித்தனம் இருந்தபோது எனது பாட்டி எங்கள் வீட்டிற்கு வந்து செல்வாரா என்றால் இல்லை, வரமாட்டார். திருநெல்வேலியில் 7 மாதம் தனிக்குடித்தனம் இருந்துவிட்டு, நானும், எனது மனைவியும் திருவேங்கடத்தில் உள்ள எனது பாட்டி வீட்டிற்கு வந்துவிட்டோம். சாட்சி மீண்டும் 7 மாதம் தனிக்குடித்தனம் இருந்துவிட்டு, திருநெல்வேலியில் இருந்துவரும் போது பிரிந்துவிட்டோம் என்கிறார். நானும், எதிர்மனுதாரர் பிரிந்துபிறகு எதிர்மனுதாரருக்கு வழக்கறிஞர் அனுப்பவில்லை என்றால் சரியல்ல, அனுப்பினேன். எனது தரப்பில் வழக்கறிஞர் அறிவிப்பில் ஆவணமாக தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நானும் எதிர்மனுதாரரும் பிரிந்துபிறகு சமாதான பேச்சுவார்த்தை நடந்தது, அந்த பேச்சுவார்த்தையில் எதிர்மனுதாரர் விவாகரத்து கேட்டார். நான் எனது மனைவியுடன் சேர்ந்துவாழ கேட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் வன்கொடுமை செய்ததாக சொல்லியுள்ள சங்கதிகள் மனுவிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரை நாங்கள் வன்கொடுமை செய்ததால்தான் அவர் ஸ்ரீவைகுண்டம் அனைத்து மகளிர்

காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சென்றார் என்றும், என் பெற்றோர்கள் அப்போது சமாதான பேச்சுவார்த்தை நடத்தியதால்தான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா, அம்மா, என் உடன்பிறந்தவர்கள் எதிர்மனுதாரருடன் தேவையில்லாமல் சண்டையிட்டு பிரச்சனை செய்தார்கள் என்றால் சரியல்ல. நானும், எதிர்மனுதாரரும் ஒன்றாக இருந்தபோது எதிர்மனுதாரருடைய தகப்பனாருக்கு உடல்நிலை குறைபாடு ஏற்பட்டு சிகிச்சை எடுத்துகொண்டார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் அவரது தகப்பனாருக்கு உதவிசெய்ய சென்றபோதுஅதனை நான் தடுத்து வன்கொடுமை செய்தேன் என்றால் சரியல்ல. என் மனைவி என்னை வன்கொடுமை செய்ததாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்து எனக்கு மனநல ஆலோசனை வழங்க பட்டதா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் திருநெல்வேலியிலிருந்து பிரிந்துசென்றபோது தூத்துக்குடி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் என் கணவருடன் சேர்ந்து வாழ செய்யுங்கள் என்று புகார் மனு கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகாரின்பேரில் எனக்கும், எதிர்மனுதாரருக்கும் தூத்துக்குடி அனைத்து மகளிர் காவல்நிலைய போலீசார் மனநல ஆலோசனை வழங்கினார்கள் என்றால் சரிதான். அப்பொழுது நான் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்கிறேன் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. இருவருக்கும் கருத்துவேறுபாடு சீராக வில்லை எனவே முடித்துவிட்டார்கள். நான் சொன்னமாதிரி எதிர்மனுதாரருக்கு உடல்நிலை குறைபாடோ, மாதவிடாய் பிரச்சனையோ இல்லை என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரர் குறித்து மனுவிலும், நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் வன்கொடுமை என்ற பதத்திற்குள் வராது என்றால் சரியல்ல. திருமண ஆன நாள் முதல் எதிர்மனுதாரர் என்னிடடேமா, குடும்பத்திராரிடமோ நல்ல முறையில் நடந்துகொண்டார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் நாளது தேதிவரை என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. எனவே, நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

BARSAD BEGUM A
Digitally signed by BARSAD BEGUM A
Date: 2026.04.24 16:47:08 +0530

**சார்பு நீதிபதி,**
**திருவைகுண்டம்**